**O.S.No. 232/2013**

**DW2 : செல்வகுமார்** தேதி 16.10.2025

பிவாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

10 ம் பிரதிவாதியின் கம்பெனியில் நான் இயக்குநராக பணிபுரிகிறேன். மொத்தம் எத்தனை இயக்குநர்கள் என்றால் 12 பேர். நான் மேனேஜிங் டைரக்டர் அல்ல. நான் எப்போதாவது கம்பெனிக்கு போவேனா என்றால் தினசரி போவேன். கம்பெனி சம்மந்தப்பட்ட வேலைகளை செய்வேன். மேனேஜிங் டைக்ரக்டர் சம்மந்தப்பட்ட வேலைகளையும் செய்வேன். என்ன வேலை என்றால் சொத்து விவரங்கள் அக்கவுண்டஸ் வரி சம்மந்தப்பட்ட விவரங்கள் ஆகியவற்றை மேற்பார்வை செய்வேன். நான் M.Com படித்து இருக்கிறேன். MOA பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம் பதிவு செய்யப்பட்டுள்ளது அதில் என் பெயர் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. நான் டைரக்டராக ஆன பிறகு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. 2015 ல் நான் சேர்க்கப்பட்டுள்ளேன். மேற்படி 2015 ல் நான் சேர்க்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட MOA தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நிர்வாக இயக்குநர் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் நிர்வாக இயக்குநர் அல்ல என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் என்பது பெருந்துறை வட்டம், பெரிய வீரசங்கிலி கிராமம் பழைய சர்வே எண்கள் 100 மற்றும் 101 என்றால் சரிதான். சர்வே எண் 100 ன் பழைய விஸ்தீரணம் 4.58 ஏக்கர் என்றால் சரிதான். சர்வே எண் 101 ன் பழைய விஸ்தீரணம் 5.52 ஏக்கர் என்றால் 5.05 ஏக்கர் என்று சொல்கிறேன். பழைய சர்வே எண்.100 க்கான புதிய சர்வே எண்கள் 180/1, 180/1A, 180/B என்றால் பழைய சர்வே எண்

100 ஐ பொறுத்து எனக்கு தெரியாது 101 ஐ தான் தெரியும். பழைய சர்வே எண் 101 க்கான புதிய சர்வே எண்கள் 180/2A, 180/2B, 180/2C என்றால் சரிதான். அதன் புதிய விஸ்தீரணம் 5.79 ½ ஏக்கர் என்றால் சரிதான். இந்த சொத்துகள் ஆதியில் விவசாய பூமிகள் என்பதால் ஒன்றோடு ஒன்று இணைந்ததாக உள்ளது என்றால் சரிதான். இந்த பூமிகள் ஆதியில் ஒரு D4 சீரங்ககவுண்டர் என்பவருக்கு வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 ன் அடிப்படையில் சுயார்ஜித சொத்துகள் என்று சொன்னால் சரிதான். 4 ம் பிரதிவாதியின் மகன் 5 ம் பிரதிவாதி. 5 ம் பிரதிவாதிக்கு 3 மகன்கள் 1, 6, 7 பிரதிவாதிகள் என்றால் சரிதான். சீரங்ககவுண்டர் அவருக்கு பாத்தியப்பட்ட ஒரு பகுதியை வாசாஆ 3 , வாசாஆ 4 அவர் மகள் தங்கம்மாளுக்கு தானசெட்டிலமெண்ட் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். சீரங்ககவுண்டர் மற்றொரு பகுதியை தன் மகள் வழி பேரன்களான 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு வாசாஆ 14 ன் படி கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். அது 18 சென்ட். மற்றொரு பகுதியை சீரங்ககவுண்டர் தன் மகள் 7 ம் பிரதிவாதிக்கு வாசாஆ 5 ன் படி தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வாசாஆ 6 ன் படி அவர் மகள் சரஸ்வதி 8 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். சீரங்ககவுண்டர் மேலும் ஒரு பகுதியை 9 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மீதி உள்ள சொத்துகளை பொறுத்து 8 மற்றும் 9 பிரதிவாதிகள் வாதிக்கு வாசாஆ 8 மூலம் கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். பழனிசாமி என்பவர் சீரங்ககவுண்டர் மீது அ.வ.எண்.2024/1978 என்ற வழக்கை தொகை கோரி வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கு ஈரோடு சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அ வ எண்.11/1980 சீரங்ககவுண்டர் மீது தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது அதற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை.

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அ.வ.எண் 11/1980 பற்றி சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். தாவா சொத்துகளை காப்பாற்றும் எண்ணத்தில் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் சீரங்ககவுண்டர் மீது பாகப்பிரிவினை கோரி அ.வ.எண் 382/1983 வழக்கை தாக்கல் செய்து அதை தொடர்ந்து நடத்தாமல் தள்ளுபடியான விவரம் தெரியுமா என்றால் தெரியும். தங்கவேல் சீரங்ககவுண்டர் மற்றும் தன்னுடைய சகோதரிகள் மீது அ.வ.எண்.621/1991 ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதில் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் ஒருதலைபட்ச தீர்ப்பாணை அல்ல அது இரு தரப்பினர் விசாரணை மேற்கொண்டு வழங்கப்பட்ட தீர்ப்பாணை என்று சொல்கிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் வாசாஆ 10 மற்றும் வாசாஆ 12 ஆகியவை ஒருதலைபட்ச தீர்ப்பாணை என்று சொன்னால் சரிதான். அந்த ஒருதலைபட்ச தீர்ப்பாணையின் மீது EP 139/2005 மனு தாக்கல் செய்த விவரம் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் அந்த ஆவணம் EP 139/2005 மனு நகல் **வாசாஆ 20**. பிவாசாஆ 1 ன் படி அமீனா சுவாதீனம் ஒப்படைத்தார் என்றால் சரிதான். அதில் சர்வே எண் 189/1,2 என்றால் அது எனக்கு தெரியாது. பிவாசாஆ 1 ல் 189/1,2 என்று காட்டப்பட்டுள்ளதா என்றால் சரிதான். பிவாசாஆ 1 ல் சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ 1 ன் படி சுவாதீன சொத்துகள் தாவா சொத்துகள் அல்ல என்றால் சரியல்ல. இரண்டு சொத்தும் ஒன்று தான் . தாவா சொத்தின் சர்வே எண் 180/2A,2B,2C ஆகும். தாவா சொத்து 189/1,2 அல்ல என்றால் சரிதான். தங்கவேல் வாசாஆ 17 மற்றும் வாசாஆ 18 தானசெட்டில்மென்ட் பத்திரங்கள் மூலம் தாவா சொத்துகளை தன் மனைவி தங்கமணி பெயருக்கு கொடுத்துள்ளாரா என்றால் சரிதான். தங்கமணி தனக்கு கிடைத்த சொத்தை ராமலிங்கம் என்பவருக்கு 2 கிரையம் கொடுத்துள்ளார்

என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் ராமலிங்கத்திற்கு தங்கவேல் மனைவி தங்கமணி கொடுத்த கிரைய பத்திரம் என்று சொன்னால் சரிதான் அது **வாசாஆ** 21 மற்றும் **வாசாஆ** 22. மேற்படி ராமலிங்கம் ஆனந்த், சுகுமார், பிரியா ஆகிய குழந்தைகளுக்கு தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனந்திற்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரம் அது **வாசாஆ** 23. நான் ஆனந்திடம் இருந்து கம்பெனி பெயரில் வாசாஆ 16 மூலம் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தை வாங்குவதற்கு முன்பாக கம்பெனி சட்டத்தின் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா என்றால் நிறைவேற்றப்பட்டது. தேவைப்பட்டால் அதை தாக்கல் செய்கிறேன். யார் பெயரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் பொது மேலாளர் ரவிச்சந்திரன் வாங்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சொத்துகளை வாங்குவதற்கு முன்பாக மேற்படி சொத்துகள் எந்த வகையில் பாத்தியப்பட்டது என்பதற்கான மூல ஆவணங்களை பார்த்தோமா என்றால் பார்த்தோம். தங்கம்மாள், பரமசிவம், ரமேஷ் ஆகியோர் சீரங்ககவுண்டர் மற்றும் 13 பேர் மீது அவ எண் 18/13 தாக்கல் செய்ததை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேற்படி வழக்கின் தீர்ப்புரை நகல் **வாசாஆ** 24. அந்த வழக்கு தொடர்ந்து நடத்தப்படாமல் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். அ.வ.எண் 621/91 வழக்கில் என்ன பரிகாரம் கேட்டிருந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. அ.வ.எண்.621/91 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ஒத்துகொள்கிறேன் அது சரிதான். அ.வ.எண் 168/2005 என்ற வழக்கை சீரங்ககவுணட்ர் அவர் மகள் சரஸ்வதியும் தங்கவேல் பெயரில் வழக்கு தாக்கல் செய்திரகிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அ வ எண்.382/1983 என்ற வழக்கு ஒருதலைபட்ச தள்ளுபடியான விவரம் தெரியாது. அ.வ.எண் 621/91 வழக்கில் அனைத்து

ஆவணங்களும் நீதிமன்றத்தில் அழிக்கப்பட்டுவிட்டதாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நகல் மனுவில் மேற்குறிப்பாகிவிட்டது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி தவறான ஆவணங்களை கொண்டு சொத்துகளை வாங்கி வாதிகளை மிரட்டி பணிய வைக்கும் எண்ணத்தில் எதிர் வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.